**உறுப்பினர் செயலர்**
**சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை – 600 008**
**அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை: முனைவர்.D.கார்த்திகேயன், இ.ஆ.ப.**

---

செயல்முறை ஆணை எண்.RT/16127/2019-4 நாள்: 24.9.2019

பொருள்: செ.பெ.வ.கு. – பரப்பு திட்ட பிரிவு – திட்ட அனுமதி – சென்னை பெருநகர எல்லைக்குள் உள்ளடங்கிய பேரூராட்சி பகுதிகளில் திட்ட அனுமதி வழங்க அதிகாரப் பகிர்ந்தளிப்பு – ஆணையிடுவது – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.147, வீ.வ.ம.ந.வ.துறை, நாள் 26.10.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, உ.நி.ம.கு.வ. துறை, நாள் 4.2.2019.

*****

**ஆணை :**

பார்வை 1ல் தமிழக அரசு கட்டடங்களுக்கு வழங்கப்படும் தளப்பரப்பு குறியீட்டை 1.5 லிருந்து 2.0 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்தது. தொடர்ந்து பார்வை 2ல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள், 2019, அறிவிக்கை செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமானது அக்டோபர் மாதம் 2018 லிருந்து உயர்த்தப்பட்ட தளப்பரப்பு குறியீட்டிற்கான திட்ட அனுமதி விண்ணப்பங்களை பரிசீலித்து அனுமதி வழங்கி வருகிறது.

2. தற்பொழுது அரசு அமுல்படுத்தியுள்ள கூடுதல் தளப்பரப்புடன் கூடிய திட்ட அனுமதி விண்ணப்பங்களுக்கு திட்ட அனுமதி வழங்க ஏதுவாக, தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 9–சி, உட்பிரிவு (3)யின் படி கீழ்காணும் திருத்தப்பட்ட அதிகாரப் பகிர்ந்தளிப்புகள், பேரூராட்சிகளுக்கு வழங்கி ஆணையிடப்படுகிறது.

| கட்டட உபயோக வகைகள் | தற்பொழுது வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்ந்தளிப்பு | திருத்தி அளிக்கப்படும் அதிகாரப் பகிர்ந்தளிப்பு |
|---|---|---|
| குடியிருப்பு கட்டடங்கள் | 9 மீ வரை உயரம் உள்ள 6 குடியிருப்புகள் கொண்ட தரைத்தளம் மற்றும் முதல் தளம் அல்லது வாகன நிறுத்தும் தளம் மற்றும் இரண்டு தளங்கள் | 12 மீ உயரம் வரை உள்ள, 7,000 சதுர அடி பரப்பளவு வரை கட்டப்படும் 8 குடியிருப்புகளுக்கு மிகாமல் கொண்ட தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்கள் அல்லது வாகன நிறுத்தும் தளம் மற்றும் மூன்று தளங்கள் |

...2

Verified RealEstate™

3. வணிக உபயோக கட்டடங்கள் (12 மீட்டர் உயரம் வரை), நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கான கட்டடங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதிகார பகிர்ந்தளிப்பின் அடிப்படையில் 18.3 மீ உயரம் வரை தொடர்ந்து திட்ட அனுமதி வழங்கலாம். மேலும், மனை உட்பிரிவுகளுக்கான திட்ட அனுமதி வழங்க தற்பொழுது நடைமுறையில் உள்ள அதிகாரப் பகிரிந்தளிப்பு தொடரும்.

– ஒப்பம்–
24.9.2019
**உறுப்பினர்–செயலர்**

<u>பெறுநர் :</u>

**செயல் அலுவலர்**
அனைத்து பேரூராட்சிகள் (சென்னை பெருநகரப் பகுதி)

<u>நகல்:</u>

1. துணைத்தலைவர் அவர்களின் தனிச்செயலர்
2. உறுப்பினர்–செயலர் அவர்களின் தனிச்செயலர்
3. முதன்மை செயல் அலுவலர் அவர்களின் தனி எழுத்தர்
4. தலைமை திட்ட அமைப்பாளர்களின் தனி எழுத்தர்
5. முதுநிலை திட்ட அமைப்பாளர்களின் தனி எழுத்தர்
6. துணை திட்ட அமைப்பாளர்கள்
7. உதவி திட்ட அமைப்பாளர்கள்
8. நிர்வாக அலுவலர்
9. உபரி

/ உண்மை நகல் /

24/09/2019
துணை திட்ட அமைப்பாளர்
24/9/19

Verified RealEstate™